

RB 30/8/79



152
T4511
OFFICE OF THE CURATOR
RECEIVED
8 செப 1979
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



தேனோலை 21

தூலை - 1979

# தேனோலை

காலாண்டிதழ்

இதழ் 21 சூலை 1979

தனி இதழ் ரூ. 2 ஆண்டுக் கட்டணம் ரூ. 8

தொகுப்பதில் உதவி:

**பெ. அர்த்தநாரீசுவரன்** MA, M. Phil

ஆய்வாளர், வரலாற்றுத்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னை-600005.

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

11-B, இரண்டாவது அவின்யு

இந்திரா நகர், சென்னை-600020.

# கொல்லி மலைச் செப்பேடு

## முன்னுரை

### 1. அறிமுகம்

கொங்கு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் கொல்லி மலை வளத்திற்கோர் எடுத்துக்காட்டு. குறிஞ்சி நிலம். வல்வில் ஓரியின் மலை. புலவர்கள் நாவில் புகுந்து விளையாடிய மலை. கொல்லிப்பாவை என்ற அழகுப் பதுமை பற்றி ஆயிரங் கதைக ளுண்டு. அம்மலையில் கிடைத்த ஒரு செப்பேட்டினை அறிமுகப் படுத்துவதில் பெருமையடைகின்றோம்.

### 2. கண்டவர்

புலி வேட்டைக்குச் செல்வோர் பயந்தும், பதுங்கியும், பாய்ந்தும், முன்னேறுவதுபோல கடந்த மூன்றாண்டுகளாக முயன்று தேடிக் கண்டுபிடித்தவர் நாமகிரிப்பேட்டை தமிழாசிரியர் புலவர் வெ. இரா. துரைசாமி ஆவார். கொல்லிமலை மலைவாசி ஒருவரிடமிருந்து இதனை மூன்றாண்டுகட்கு முன்பு பார்த்து வந்து கூறினார். அப்போது படி எடுக்க இயலவில்லை. பின்னர் வருவாய்த்துறையின் சிற்றதிகாரிகள் பட்டயம் தேடும் முயற்சியில் கையாண்ட மிரட்டல் உத்திகளால் பட்டயத்தைக் காணவில்லை எனச் சாதித்துவிட்டனர். புலவர் அவர்களின் இடைவிடாத இனிய அணுகு முறையின் மூலம், தன் பெயர் வெளியே வரக்கூடாது என்ற நிபந்தனையுடன் படி எடுத்துக்கொள்ள மட்டும் அனுமதித்தாராம். ஒரு வழியாக அப் பட்டயத்தின் இரண்டு ஏடுகள் மட்டும் படி எடுக்க கிடைத்தன. அந்த வாசகம் மட்டும் இங்கே வெளியாகியுள்ளது.

### 3. படி

புலவர் வெ. இரா. துரைசாமி அவர்கள் மிகவும் புதிய எளிய முறையில் படி எடுத்துக்கொண்டார். இளம் பிள்ளைகள் தம் பள்ளிப் பருவத்தில், ஒரு தாளின் அடியில் ஏதாவது ஒரு நாணயத்தை வைத்துக் கொண்டு தாளின்மேல், பென்சிலின் பின் பகுதியால் தேய்ப்பதைக் கண்டிருப்பீர்கள். அதனால் நாணயத்திலுள்ள படமும் எழுத்துகளும் தெளிவாக விழும். இதே முறையைப் பயன் படுத்தி பென்சிலின் முனையைச் சாய்வாகப் பிடித்துக்கொண்டு பட்டயத்தின் மீது தீத்தியுள்ளார். குழியான எழுத்துப் பகுதி வெள்ளையாகவும், மேட்டுப்பகுதி கறுப்பாகவும் உள்ளது. படிக்கும் வகையில் எழுத்துகள் தெளிவாக உள்ளன.

### 4. வாசித்தல்

புலவர் வெ. இரா. துரைசாமி தமிழகத் தொல்லியல் துறை கோடையில் நடத்தும் பயிற்சி வகுப்பில் பயின்றவர். எழுத்துப் பயிற்சி மிக்கவர் அவரே படித்து எழுதி அனுப்பியுள்ளார். அதனை புலவர் செ. இராசுவும், கொடுமுடியாரும் மீண்டும் படித்து செப்பம் செய்து கொண்டனர். வாசகத்தில் ஐயம் தோன்றினால் தேனோலை அலுவலகம் வந்து ஒப்புநோக்கி சரி செய்துகொள்ளலாம்.

### 5. பட்டயம்

பட்டயம் செப்புத் தகட்டால் ஆனது. இரண்டு ஏடுகள் மட்டும் கிடைத்துள்ளன. நீளம் 27செ.மீ. அகலம் 11செ.மீ கனம் ஒன்றரை செ.மீ. இருக்கின்றதாம்! (நம்ப முடியவில்லையல்லவா? எனினும் உண்மைதான்!) இரண்டும் சேர்ந்து எடை அரை கிலோ இருக்குமாம். தகட்டின் இரண்டு பக்கமும் எழுதப்பட்டுள்ளது. 40 வரிகள் உள்ளன.

### 6. செய்தி

கொல்லிமலையில் குச்சக நாட்டிலுள்ள கருங்கயம் என்ற நகரத்துக்கு எல்லை கூறப்பட்டுள்ளது. சூழ்ந்துள்ள ஒவ்வொரு பகுதியின் எல்லையும் ஒன்றன்பின் ஒன்று அமையுமாறு வரிசையாகச் சொல்லப் பட்டுள்ளன. இயற்கைக் கூறுகளான ஓடை, ஆறு, மலை, கரடு, பாறை (பருதை) என்றவாறு சொல்லுவது குறிப்பிடத்தக்கது. பட்டயம் முடியவில்லை. எல்லைகள் முடிந்ததும் முற்றுப் பெற்று விடும் எனத் தோன்றுகிறது. அக்கால நில அளவைப் பொத்தகத்தின் நகலாக இதனைக் கருதலாம்

### 7. காலம்

பட்டயத்தின் தொடக்கமே "ஸ்வஸ்தி ஸ்ரீ பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராஜர் ஆள்ச்சிக்குச் செல்லா நின்ற யாண்டு ஒழாவது" எனத் தொடங்குகிறது. யார் இந்த பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராசர்? இதுபோன்ற சொற்றொடர் இதுவரை கேட்டதாகத் தெரியவில்லை. எனினும் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்" எனக் கேட்டுள்ளோம். இராசராச சோழன், ஆதித்த கரிகாலன் ஆகியோர் தந்தையான சுந்தர சோழ சக்கரவர்த்தி, தனது இறுதிக் காலத்தை, காஞ்சியில் ஆதித்த கரிகாலன் அமைத்த பொன்மாளிகையில் கழித்து, அங்கேயே உயிர்நீத்ததாகச் சொல் வார்கள். அவனது காலம் 957 — 970 வரை ஆகும். "பொன் மாடத்தாண்டார்" என்பது அவனைக் குறிக்குமா என்று தெரிய வில்லை. அவ்வாறு குறித்தால் இப்பட்டயத்தின் காலம் கி. பி. 964

ஆகும். எழுத்தமைதியை இக்காலத்திற்கேற்றதாகவும் கொள்ளலாம். எனினும் "பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராசர்" என்ற சொல்லாளுகை வேறு ஏதேனும் கிடைத்த பிறகே இறுதியாக்கலாம்.

## 8. கருங்கயம்

தற்போது கலிங்கம் என்றழைக்கப்படும் பகுதியாக இருக்கலாமென்று தோன்றுகிறது. அறப்பளீஸ்வரன் கோயிலிலுள்ள செம்பியன் மாதேவியார் கல்வெட்டில் 10 ஊராரிடம் 100 கழஞ்சு பொன் கொடுத்து விழா நடத்த ஏற்பாடு செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் "கருங்கயம்" என்பதுவும் ஒன்றாகும்.

## 9. எழுத்து

றா என்ற எழுத்து ஒரே வடிவமாக ரு என்று இல்லாமல் "ற" வுடன் "ா" கால் சேர்த்து வெட்டப்பட்டுள்ளது.

## 10. எல்லை

இப்பட்டயத்தால் ஒரு ஊரின் எல்லையை குறிக்கும் முறையை அறிகின்றோம். கருங்கயம் என்ற ஊரைச் சூழ்ந்து உள்ள ஊர்களாவன:

1. வலப்பெருங்கோடு
2. பெருங்கறைக் கோட்டை
3. அருவியூர்
4. தியாவகையார் கோட்டை
5. பூண்டியங்கல்

கருங்கயத்திற்கும் அடுத்துள்ள மேற்கண்ட ஊர்களுக்கும் இடையில் உள்ள எல்லையின் அடையாளங்கள் இப்பட்டயத்தில் கூறப்பட்டுள்ளன.

பட்டயத்தின் வாசகம் முற்றுப்பெறவில்லை. பட்டயத்தின் மீதி ஏடுகளையும் தேடும் படலம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கிடைத்ததும் வெளியிடுவோம்.

## 11. பதிப்பு முறை

பட்டயத்தின் வாசகம் பொருள்வாரியாகப் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இடையில் உள்ள எண்கள் வரிகளின் எண்கள் ஆகும். கொல்லிமலைச் செப்பேடு — பட்டயம்

# கொல்லி மலைச் செப்பேடு

## மூலம்

**முதல் பக்கம்**

(1) ஸ்வஸ்திஸ்ரீ பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராஜர் ஆள்(2)சிக்குச் செல்லாநின்ற யாண்டு ஏழாவது

கொல்லிம(3)லைமேல் குச்சகநாட்டுக் கருங்கத்து நகரத்துக்குப் (4) புலவெல்லை நிர்ணயித்த பரிசாவது

திருவற(5)ப்பள்ளி தேவர் நிலத்தொடு கருங்கயத்தூர் நி(6)லத்தோடெல்லையாவது

கட்டியன் சாத்தன்ஆறெய்(7)பிடித்துக் குவளைக் கழந்நிக் கேய் வன்து நட்ட (8) புதலெய் புதாலாக மீகரைக்

கருங்கயத்து நகரத்தாரது கு(9)வளைக் கழன்னித் தலைக் கழன்னி யூற்றுக்கேய் சென்று

**இரண்டாம் பக்கம்**

(10) கிழக்கு நோக்கி இற்றீயோடு கல்லுக்கேய் சென்று கி [ழ] (11)க்கு நோக்கி செந்று திடுதிடுக்கை அறைக்கேய் சென்று

கிழ(க்)கு (12) நோக்கி சென்று வடவூர் ஏரியேய் சென்று பூதப் பருதை(13)க்கேய் செந்று சேற்றாம்பலோடுட்றேக்கேய் செந்று கல்(14)லாலுக்கேய் சென்று ஆற்றுக்கேய் சென்றது தேவர் நிலத்தி(15)ல் எல்லை

கருங்கயத்து நகரத்துக்கு வலப்பெருகோடு எல்(16)லையாவது வடக்கு நோக்கி செந்று ஆற்றேய்வுற்றது

கருங்(17)கயத்து னகரத்தார்க்கும் பெங்கறைக்கு மேலெல்லை (18)யாவது, வடக்கு நோக்கி ஆற்(றே)றாறேய் செந்றருவிக்கேய் வுற்ற (19) து பெருங்கறைய் கோட்டை எல்லை.

கருங்கயத்து

**மூன்றாம் பக்கம்**

(20) நகரத்தாரோடு அருவியூரோடு மெல்லையாவது அருவி பு (21) னைந்துறையில்ந் நின்றேறிக் கள்ளார்ந் பள்ளிக் குந்று (22) க்கேய் வந்து இந்நீரப்பா லெல்லாம் நகரத்தாரது அந்த..............(23) டாடு அருவியூரது கடுகுகால் குற்றுக் கேய் வந்து ஆற்று (24) க் கேய் வந்து ஆற்றுநின்று

மயிலாடிப் பருதைக்கேய் வ (25) ந்து கற்க்கடைக்கேய் வந்து கற்கடைமேலை இற்றி (26) கல்லுக்கேய் வந்து ஊயந்வானர் கலை செட்டுக் (27) கேய் வந்து நுரைக் கற்றைக் கறிக்கேய் வந்து கடற்று (29) கேய் வந்து விழுத்திய் லூற்றுக்கேய் வந்து பெரிய (30) [வறைக்] கேய் வந்து எருலும் பூல் லோடறைக்கேய்

**நான்காம் பக்கம்**

(31) வந்து வடக்கு நோக்கி கிழருக்கறைக் கேய் வந்துந் (32) நெல்ப் பருதைக் கேய் செந்று தியாவகையார் எல்லை (33) க்கேய் சென்றது அருவியூரார் எல்லை.

கருங்கய (34) த்தா ரோடு தியாவகையா ரோடெல்லை யாவது பில்லுண் (35) டாந் பருதைக் கேய் செந்று பூண்டியங் கல்லுக் கேய் (36) செந்று கல்லு நட்டி ஆறே செந்று பேகற்றுக் கேய் (37) செந்று ஆற்றுறேய் செந்று இழிந்து பள்ளத்துக் (38) கேய் செந்றது தியாவகையார் கோட்டை எல்லைய்.

(39) பூண்டியர் கொ——டு கருங்கயத்து நகரத்தாரோ டெல் (40) லையாவது ஆற்று நிற்றுத் தெற்கு நோக்கி —

பட்டயம் முடியவில்லை.

---

# ஒரு கேள்வி

திருச்செங்கோட்டு நாகர்குன்றில் ஒரு குண்டுப்பாறையின் கீழ் கல்வெட்டு உள்ளது. பின்பகுதி படி வெட்டும் போது சிதைந்துள்ளது. எங்களுக்குப் பொறுமையில்லாததால் முழுதும் படிக்க முயலவே முடியவில்லை. எனினும் தொடக்கப் பகுதியைக் கீழே காண்க.

கோச்ச ட வர்மரான......
பணச்சக்கு வசிக்கல் ஸ்ரீ வீர ராஜே
ந்தர தேவற்கு யாண்டு க வது
கொங்கு பூந்துறை நாட்டு நாட்டவரோம்..............

கேள்வி இம்மன்னன் யார்? தோராயமான அனுமானமாக இருந்தாலும் பரவாயில்லை. உடேன எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

# இருப்பிலி

## அமைவிடம்

திருச்செங் கோட்டிலிருந்து இராசிபுரம் செல்லும் வழியில் எலச்சி பாளையம் அமைந்துள்ளது. இங்கு பிரிந்து வேலகவுண்டன்பட்டி வந்து சேருகின்ற பிரிவுச்சாலையில் இலுப்பிலி என்னும் ஊர் உள்ளது. அழகிய சிற்றூர். திருமணிமுத்தாற்று நீர் பாயும் ஒரு மிகப் பெரிய ஏரி இங்குள்ளது. திருமணி முத்தாறும் மிக அருகிலேயே ஓடு கின்றது.

## பெருமாள் கோயில்

அங்கு பல சிறிய கோயில்கள் உள்ளன. ஒரு பெரிய பெருமாள் கோயிலும் உள்ளது. ஓரளவு பழமையான கோயில் அங்கு ட வடிவில் அமைந்த கோயிலில் இரண்டு பெருமாள் குடிகொண்டுள்ளனர். ட வடிவின் இரண்டு முனைகளிலும் இரண்டு கருவறைகளும் உள்ளன. இரண்டு கோடுகள் சந்திக்கும் நிலையில் இருந்து இரண்டு பெருமாள் மூர்தங்களையும் ஒரே சமயத்தில் வணங்கலாம். அழகராயப் பெருமாள் என்றும் தேவராயப் பெருமாள் என்றும் பெயர் கொண்டுள்ளனர்.

## தேவராயப் பெருமாள்

கிழக்கு நோக்கி உள்ளது தேவராயப் பெருமாள் கோயிலாகும். இதுவே மிகவும் பழைமையானதாகத் தெரிகின்றது. இதன் கருவறை வடச்குச் சுவரின் குமுதவரியில் ஒரு கல்வெட்டு உள்ளது, ஓய்சால மன்னர்களில் இராமநாதன் காலத்தில் (கி. பி 1268) தேவராயப் பெருமாள் கோயிலுக்கு திருவிளக்குப்புறமாக அளித்த நன்கொடை கூறப்பட்டுள்ளது.

## இலச்சினை

தேவராயப் பெருமாள் கோயிலில் நுழைவாயில் வலதுகைப் பக்கம் சுவரில் வடித்துள்ள சிற்பம் குறிப்பிடத்தக்கதாயுள்ளது. ஒரு சதுரக் கட்டத்தில் விநாயகர், அதன் அருகில் அமர்ந்த வடிவில் பன்றி உருவம் செதுக்கப் பட்டுள்ளது. ஓய்சல மன்னர்களின் அரச முத்திரைக்கும் இதற்கும் பொருத்தம் தெரியவில்லை. எனினும் இவ்வடிவங்கள் அமைத்துள்ள இடமும் பாணியும் அரச முத்திரை என்று கூறும் வகையில் அமைந்துள்ளது. ஆய்வுக்குரியது.

**கல்வெட்டு வாசகம்**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ இராமனாத தேவற்குயாண்டு 14 வது இருப்பல்லி யான க்ஷத்திரிய சிகாமணி சதுர்வேதி மங்கலத்து தேவப் பெருமாளுக்கு திருவிளக்குப் புறமாக

2. இவூர் சபையார் தோட்டக் கூற்றில் சபை பொதுவான நிலத்துக்குழி 25ம் சபையார் பக்கல் பொன்னறக் குடுத்து மண் ணறக் கொண்ட வெட்டென கௌ

3. ண்டச்சப் பள்ளியில் கேசக் கவுண்டன் மகன் முத்தண் ணனேன். இக்குழி இருபத் தஞ்சும் விலக்குமன் ஏழெச்ச மறுவான். இது காக்குமவன் கால் ரெண்டு

4. மெந் தலைமேலே.

5. பின்பு

6. மேற்படியான் அமுதுபடிக்கு இவர்களில் செல்லநம்பி பக்கல் பொன்னறக் குடுத்து மண்ணறக் கொண்டு விட்ட குழி ஐம்பதும் சிறுகாலைச் சந்திக்கு உரி அரிசிக்கு குடுத்தனம். விலக்குமன் ஏழெச்சமறு வான்

**செய்தி**

கௌண்டச்சப்பள்ளியைச் சேர்ந்த கேசக் கவுண்டன் மகன் முத்தண்ணன் என்பவன் ஊர்ச்சபையாரிடம் 25 குழி நிலத்தைக் கொடுத்து தேவராயப் பெருமாளுக்கு திருவிளக்கு ஏற்ற ஏற்பாடு செய்கின்றான்.

இதற்குப் பின் சிலநாட்கள் கழித்து வைகறைப் பூசைக்கு அமுதுபடி வழங்கும் பொருட்டு இதே முத்தண்ணன் செல்லநம்பி என்பவன் வசம் ஐம்பது குழி ஒப்படைக்கிறான்.

இவ்வூர் இருப்பல்லி என்ற பெயரில் இருந்துள்ளது. இதன் மறுபெயர் சத்திரிய சிகாமணிச் சதுர் வேதி மங்கலம் ஆகும்.

**ஆண்டு**

ஓய்சள மன்னர்களில் இராமனாதன் ஆட்சியில் 14 ஆம் ஆண்டு வெட்டப்பட்டுள்ளது. ஓய்சள மன்னர் வமிசாவளி வருமாறு.

**ஒய்சாளர்கள் (1022—1342)**

1. நிருபகாமன் 1022—47
2. விநயாதித்தன் 1047—98
3. எறெயங்கன் 1063—1100

4. வல்லாளன்—I 1100—1110
5. விஷ்ணுவர்த்தனன் 1110—52
உதயாதித்தன்

6. நரசிம்மன்—I (1152—73)
7. வல்லாளன்—II (1173—1220)
8. நரசிம்மன்—II (1220—38)
9. சோமேஸ்வரன் (1233—67)

10. நரசிம்மன் —III (1054—92) இராமனாதன் 1254—95
11. வல்லாளன்—III (1291—1342) விஸ்வநாதன் 1295—1:00
12. வல்லாளன்—III

இராமனாதனின் ஆட்சியாண்டு 14 என்பதால், இக்கொடை யின் காலம் கி.பி 1268 என நிர்ணயிக்காலம்.

அழகராயப் பெருமாள்

அழகராயப் பெருமாள் கோயில் கருவறைச் சுவரின் பின்புறம் உள்ள கல்வெட்டு வாசகம் :

**கருவறை வடக்குச் சுவர்**

1. சுஷ்த்தி ஸ்ரீ சாலிவான சகாற்தம் 1767 கலியுக சகாத்தம்
2. 4658 யிதின்மேல் செல்லா நின்ற நம்மை சம்மச்சறம சித்திரை மீ"
3. க தீ சுக்குற வாரமு சத்தமிய் மிருகசீரிஷ நஷ்செத்திரமும் கூடிய சுபதினத்தில்
4. அழகறாயந் சுவாமிக்கி கெறுப்பக் கிறக அற்த்த மண்டபமும் தேவறாய சுவாமிக்கி

**கற்பக்கிரக மேற்குச் சுவர்**

5. மகா மண்டபமு யிந்த சுவாமிகளுக்கு சேஷய்யன்ங்கார் பூசை
6. பண்ணுகிற நாளையிலே செவிந்தி குலத்து காணியாழ
7. க் கவுண்டர்கள் நாங்களே உபையமாயிக் கட்டி வச்சது.
8. கோவில் யிந்த வேலைக்கி யெசமானாயிருந்து வேலை நடப்பு வைச்சது
9. அழகப்ப கவுடன் பழனி கவுடன் முத்துக் கவுடன்

**அடுத்த கல்**

வேலை பண்ணனது சுப்பனாசாரி.

**செய்தி**

பிற் காலத்தில் கோயிலைப் புதுப்பித்துக் கட்டியுள்ளார்கள். அதன் விவரம் சொல்லப் படுகிறது. காலம் கலியுகாப்திலும், சாலிவாகன சகாப்தத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவை பொருந்தி வரவில்லை. நாள், நட்சத்திரம் கொண்டு ஆராய வேண்டும்.

கோயில் உபையமாகக் கட்ட ஏற்பாடு செய்தவர்கள் வேளாளர் களில் செவந்தி குலத்தவர்கள். கட்டுமான வேலையை முன்னின்று செய்தவர்கள் வன்னியகுலத்தினர் மூன்று பேர், அழகப்பன், பழனி, முத்து என்பார். கட்டியவர் கல்தச்சாசாரி சுப்பண்ணன்.

**தாழ்வாரம்**

கோயிலின் வடக்குப் புறம் மதில் நெடுக ஒரு மண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. தற்கால வடிவில் புதிய கல் ஒன்றுள்ளது.

**தேவராஜ அழகராஜ பெருமாள் கோயில்**

(குலதெய்வம்)

1. ஒருச்சேரி புதூர் 2. குட்டிபாளையம்

3. காட்டுப்பாளையம் 4. பிரமியம்

இந்த நான்கு ஊரைச் சேர்ந்த வன்னியகுல க்ஷத்திரிய வம்சத் தினர். அனைவரும் சேர்ந்து செய்து உபயம் 93′ × 8¼′ அளவுள்ள தாழ்வாரம் செய்து முடித்தவர் R. அழக கவுண்டர்

**முடிவு**

இருப்பிலி என்ற இச்சிற்றூர் இருப்பல்லி என்ற பெயருடன் இருந்துள்ளது. திருமணித் முத்தாற்றில் அணைகட்டி கால்வாய்

எடுத்து வந்து பெரிய ஏரி அமைத்து வளமாக வாழ்ந்திருக்கின்றார்கள். திறமையான ஆட்சிப் பொறுப்பேற்ற ஊர்ச்சபை இருந்துள்ளது. பெருமாள் கோயில் காலங்கள் தோறும் வழிபாட்டில் இருந்து வந்துள்ளது. வேளாளருக்கும், வன்னியருக்கும் குலதெய்வமாக பெருமாள் கோயில் விளங்கி வந்துள்ளது.

கல்வெட்டுகளில் மொழிவளர்ச்சிக் கூறு ஒன்று விளங்குகின்றது.

13ம் நூற்றாண்டு — தேவப் பெருமாள்

18ம் நூற்றாண்டு — தேவறாயப் பெருமாள்

அழகறாயப் பெருமாள்

தற்காலம் — தேவராஜப் பெருமாள், அழகுராஜப் பெருமாள்.

பெருமாள் ஒருவரேயாயினும் எழுத்து வடிவில் அவர் கொண்ட அவதாரங்கள் மூன்று.

திருமணி முத்தாற்றில் வெள்ளம் வருமாறு மழை பெருக வேண்டும். இலுப்பிலி ஏரி நிரம்ப வேண்டும்.

---

## சுமைதாங்கி

திருச்செங்கோட்டிலிருந்து வையப்பமலை செல்லும் பாதையில் 18/6—18/8 கிலோ மீட்டர் கற்களுக்கிடையில் ஒரு சுமைதாங்கி உள்ளது தற்போது அதன் இரண்டு நிலைக் கற்கள் மட்டும் உள்ளன. அதன் அருகில் இரண்டு தனிக்கற்கள் உள்ளன. சுமைதாங்கியிலும், தனிக்கல்லிலும் கல்வெட்டுகள் உள்ளன. அருகிருக்கும் ஊரின் பெயர் மரப்பறை—கொண்ணையாறு.

**சுமைதாங்கியில் உள்ள எழுத்து**

அம்மாப் பேட்டை மாரிமுத்து செட்டியார் உபயம்.

**தனிக்கல் (உயரமானது) (எண்கள் வரியைச் சுட்டும்)**

(1) நிகழும் சர் (2) வதாரி ஆண் (3) டு ஆவணி மீ" (4) 2 ந் தேதி சேல (5) ம் வணிக வை (6) ஸ்ய ஐய்யம் (7) பெருமாள் செட் (8) டியார் குமாரத்தி (9) நாகம்மாள் அ (10) வர்களின் (11) நிணைவிற் க (12) க தம்பி அம் (12) மாபேட்டையில் (13) மாரிமுத்து (14) செட்டியார் உப (15) யம்.

**தனிக்கல் (குட்டையானது)**

(1) செய்வினை முத (2) விய குணங்க (3) ள் இருந்தாலும் (4) நிவர்த்தியாகு (5) ம் இப்படிக்கு அம் (6) மா பேட்டைல் (7) மாரிமுத்து (8) செட்டியார்

**நம்பிக்கை**

சுமைதாங்கிக் கல் நடுவது ஒருவரின் நினைவிற்காக, அது ஒரு நல்ல காரியம். இதனால் பில்லி சூனியம் போன்ற செய்வினைக் குணங்கள் அகலும் என்ற நம்பிக்கை பொதுமக்களிடையே நிலவி வந்ததை இதனால் அறிகின்றோம்.

# இராமாயண அம்மானை ஓலைச் சுவடி

## முன்னுரை

### 1. அறிமுகம்

இராமாயணம் பல்வேறு வடிவங்களில் தமிழகத்தில் உலவு கின்றது. அதில் ஒருவகை அம்மானை வடிவமாகும். எளிய அகவல் நடையில் பாமரரும் கேட்டவுடன் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது இராமாயண அம்மானை முழுமையாக ஓலைச் சுவடியில் கிடைத்துள்ளது. அதன் சுவை அறியும் பொருட்டு மூன்று அத்தியாயங்களை மட்டும் இங்கு பிரசுரிக்கின்றோம். அவை சீதா அபகரணம், வாலிவதம், லங்கா தகனம்.

### 2. சுவடியாளர்

ஓலைச் சுவடியை முழுதுமாக வைத்திருப்பவர் ஊமையாம் பட்டிப் புலவர் கந்தசாமி அவர்கள். முதிய வயதினர். தமிழ்க் கவி புனையும் ஆற்றலர். தமிழ் ஆர்வலர். பல ஓலைச் சுவடிகளைத் தேடிப் பிடித்து சேமித்து வைத்துள்ளார். வள்ளல்களின் பொரு ளுதவி கொண்டு அவ்வப்போது பல சுவடிகளை வெளியிட்டுள்ளார். ''செங்கோட்டுப் பள்ளு'' என்ற நூல் அதில் ஒன்று. மிகுந்த முயற்சி உடையவர். அவரிடம் ஏராளமான நூல்கள் பிரதி செய்யப்பட்டுத் தயாராக உள்ளன. பொருளுதவி செய்ய ஆளில்லாததால் முடங்கிக் கிடக்கின்றன.

### 3. அரசின் உதவி

ஓலைச் சுவடிகள் திரட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளதாக அவ்வப்போது அறிவிப்புகள் மட்டும் வருகின்றன. ஆனால் இது வரை ''இவ்வளவு தொகை கொடுத்து இன்ன சுவடி வாங்கப் பட்டது'' என்று எந்த செய்தியையும் ஏடுகளில் காணவில்லை.

### 4. தேடும் பணி

சுவடிகளை விரைவில் திரட்டுவது இன்றியமையாப் பணி. கிராமங்களில் கல்வி அறிவு பெருகப் பெருக, ஓலைச் சுவடிகள்

காவேரிக்கு இறையாகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பழைய பேப்பரை எடைக்கு வாங்குவது போல எல்லாச் சுவடிகளையும் கிலோக் கணக்கில் வாங்கிச் சேர்க்கலாம். பணம் கொடுக்காமல் இலவசமாகப் பெற இயலாது. எல்லாம் அழிந்த பின்னர் வருத்தப் பட்டுப் பயனில்லை.

## 5. பதிப்பு

கற்றறிந்தார் பலரிடம் ஓலைச் சுவடிகள் உள்ளன. அவற்றைப் புத்தகமாக அச்சிட்டு அதில் அவர்களது பெயரைக் குறிப்பிட்டால் கூடப் போதும்; கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் பலர் அச்சிடுவதாகச் சொல்லி வாங்கிச் சென்று விடுகின்றனர். பின்னர் ஒரு கடிதம் கூடப் போடுவதில்லை. அதனால் மனம் நொந்துள்ள பலர் தம்மிடம் இருப்பதைக் கொடுக்க அஞ்சு கின்றனர்.

## 6. படித்தல்

ஓலைச் சுவடிகள் படிப்பது பெரும்பாடு. பொறுமை வேண்டும். கொஞ்சம் தன்னம்பிக்கை இருந்தால் போதும். எல்லோராலும் முடியும். ஆனால் யாரும் முன்வருவதில்லை. படித்து காகிதத்தில் பிரதி செய்வதும், மீண்டும் ஒப்புநோக்குவதும், அச்சிற்கு ஏற்ற வகையில் பதம் பிரித்து எழுதுவதும் பெரும் பணிகள். எளிய வேலை அல்ல.

## 7. அரசின் பணி

ஆண்டிற்கு ஒரு சில ஆயிரங்கள் ஒதுக்கினால் போதாது. ஒரு சில கோடிகளாவது ஒதுக்கினால்தான் தற்போது தமிழகத்தின் கிராமங்களில் முடங்கிக் கிடப்பவற்றில் நூற்றில் ஒரு பங்கையாவது வெளிக் கொணர முடியும். கிராம அதிகாரிகளின் மூலம் மிரட்டு வதோ, இலவசமாகப் பெற முயலுவதோ, நல்லதல்ல; அழிவுக்கே வழிகோலும். நளினமாகக் கையாள வேண்டிய நல்ல பணி.

★
★★

# இராமாயண அம்மானை

## (சீதாபகரணம்)

ஏதேது சொன்னாலும் எப்படித்தான் வைதாலும்
மாதரிடசொற்கேட்டு வடுவர்ச்சே தம்பியரே
என்றார் பெருமாளும் இலட்சுமணரைப்பார்த்து
மன்றாடுஞ் சோதி மகா தேவா என்று நொந்து
நின்றார் இருவருமாய் நினையாதெல்லாம் நினைந்து
ஏற்றமுடைய இலங்கை ராவணன்றான்
போற்றுமணித் தேரை பூமுயிலே தானிறுத்தி
தெண்டு கமண்டலமும் சீரான பொஷ்தகமும்
வெண்டரள மொத்தபல்லும் வேஷ்டியுடையழகும்
இரைத்த பெருமூச்சும் இலந்தைக் கனிப்புழுப்போல்
நரைத்ததலைவாயும் நடுநடுங்கி வந்து நின்று
ஆனகியய்யர் அகத்தைத் திசை நோக்கி
சன்னாசி யாகிவந்து தையல் நல்லீர் பிச்சை என்றான்.
வாசற் படியில்நின்று வாங்குவீர் பிச்சை யென்றாள்.
எட்டடி நடந்து பிச்சையிட ஊறு நீங்குமென்றான்
பத்தடி நடந்து (பிச்சையிடப்) பாவகங்கள் நீங்குமென்றாள்
மையாளுங் கண்ணி மாயவனார் தந்தேவி
பெண்மதியலே பெருமாள் கடைகடந்து
ஐயமிடச் சென்றாள் அரக்கனிட தேரகத்தே
மற்பிடித்த தோளான் மாயவரைக் காணாமல்
பொற்கொடியைக் கொண்டு போகவே தான்கறுகு
ஓட்டினான் சாரதிதேர் ஓடாமல் நின்றதுவே
ஓடுடனே சங்கு ஒருகையில் தான் பிடித்து
நீட்டியவற் கையை வன் நேரிழைக்கு முன்னாக
ஏடுயர்ந்த திண்டோளான் இராவணனி தேதென்றான்
ஓடு மிது சங்குமென தோடலுற்ற தம்மானே
மஞ்சரர் குழலாரை வயிரமணித்தேர் மீதே
கூகா எனும் காட்டில் கோலாகலமாக
ஆகாசமாகத் தேர் பறந்தது காண் அம்மானே
அஞ்சாதே என்று பறந்தாகாசம் போனதுவே
இந்தையொத்த செம்முகத்தால் இலட்சுமியாளப் பொழுது

கொந்தரர் குழல் விரித்துக்கூப்பிட்டாள் அம்மானே
மாலைக் குழல் விரித்துமயோத்திக் கபய மென்ருள்
சோலைக்கிளி மொழியாள் தோகை இலட்குமியாள்
முத்தார மாலையணி மோதிரங்கள் தான்கழற்றி
வித்தார முன்னே விட்டெறிந்தானம் மானே
சேணுடர் போற்றும் திரும்புடை......வே
பூணாரம் தான் கழற்றிப்பூமியிலே விட்டெறிந்தாள்
வேலைப் பொரும் விழியாள் விண்ணோர்க்கபய மென்று
காலிற் சிலம்பைக் கழற்றி எறியலுற்ருள்
வண்டாரும் பூங்குழலாள் மாதை இலட்சுமியும்
கையில் வளைகழற்றிக் காசினியில் விட்டெறிந்தாள்
மெய்யிலுள்ள பூஷணங்கள் உள்ளதெல்லாம் விட்டெறிந்தாள்
நாகத்தைப் பூண்டவற்கு அபயமென்ருள் நன்மொழியாள்.
மற்பிடித்த திண்டோளான் மாயவனர் தேவியரை
பொற்கொடியைக் கொண்டரக்கன் போகலுற்ருன் அம்மானே
கண்டான் ஜடாய் முனிவன்கடல் வண்ணன் தேவியரை
கொண்டு வருவையோ என்று கோவித்தெழுந் திருந்து
ஆழியிலங்கை அரக்கன் திடுக்கிடவே
வழியை மறித்து வளைத்தான் ஜடாய் முனிவன்
மறுகிட நெஞ்சம் வாளரக்கன் பின்னிடவே
சிறகமக் கொண்டெழுந்து நின்றுதான் ஜடாய் முனிவன்
வரைகளுடைந்த தெனமகமேரு போந்ததென
மோகரித்திரு சிறகால் மோதியமர் பொருதான்
ஏற்றம் பெரிய இராவணனெ இக்கணத்தே
முன்னும் மேகாமல் முட்டியுத்தமே பொருதான்
உயிர்கள் ஓட்டிப்போர் வாரேனென்று தானழைத்தான்
ஈரஞ்சு சென்னி உடைய இராவணனே
உயிர் நிலை யெங்கே ஒளியாமல் சொல்ல மென்ருன்
எதுத்துச்சடாயு முன்னே இலங்கை மன்னன் ஏது சொல்வான்
பாரமுடிகள் பத்தும் பரித்தாலுயிர் போகவகாண்
எங்கே உயிருணக்கு இயம்பு வாய் மாமுனியே
வாய்த்த உயிரெனக்கு வல பிறத்தில் இருக்கு காண்
சேவுகமுங்குன்றி சிறகிழந்தாய் என்றுரைத்தான்
செட்டைச் சடாய் முனியும் தேர்மேல் ராவணனுட
எட்டிப் பொருதான் இறகுகளை யம்மானே
வெற்றிச்சடாயு முனி வீரமுடனே தாண்டி
வீரமுடனே வெருட்டி மிகுந்தரக்கன் தன்தலை
பாரமுடிகள் பத்தும் பறித்துவந்தாரம்மானே
ஆளும் இலங்கை அரக்கன் திசை முடிகள்
மீள முளைத்து மிகவளர்ந்ததம்மானே

அச்சாகத்தேர் நிறுத்தி அங்கு தான்வாளரக்கன்
மெச்சாக வெட்டிவிழ விட்டான் ஜடாய்முனியை
காயாம்பு மேனியனார் கண்ணர் வருமளவும்
தாயார் சடாய் முனிக்கு சாகாமல் சாபமிட்டார்
கச்சார் முலையாரைக் கண்ணர் திருத்தேவியரை
தேன் சூழ் இலங்கையிலே தேருடனே கொண்டுசென்று
வித்தார வல்லி வேதத் தலைவியரை
மத்தாலடியுண்ட மாயருட தேவியரை
வைத்தான சோகவனத்திலே அம்மானே
செங்கண் விழிச்சி திருச்சடையைத் தானரக்கன்
கொங்கையி லட்சுமிக்குக் கூடத்துணையாக வைத்தான்
அந்தரக்கன் சொல்லி அணியிலங்கை போய்ப்புகுந்து
வந்தரக்கன் தன்னை வண்டோதரி தொழுதாள்
இலட்சுமியைக் கொண்ட இயல்புகளெல்லாம் சொன்னான்
சொன்னவுரை மறுத்துச் சொன்னாள் மண்டோதரியும்
மன்னவனே மாயனிடமங்கைதனைக் கொண்டு வந்து
ஆண்ட இலங்கையிலே அக்கினியை வைத்தாயே
என்றுதான் சொல்லி இருந்தாள் மண்டோதரியும்
பட்சமுடனிருந்தாள் பண்டு போலம்மானே
செம்மான் விழிச்சியரும், சீதை இலட்சுமிமுன்
அம்மானையாடி அரியகழலாடி
சிராப்பரந்தாடி செம்பொன் மணிப்பந்தாடி
ஆரக்கழுத்தார் அருகே துணையிருந்தார்.
கோலப்பெருமான் தலையைக் கொண்டு வந்தேனென்று
காரிகையார் முன்தலையைக் காட்டலுற்றார் அம்மானே
சேல் ஒத்தகண்ணான் திருச்சடையும் என்னசொல்வாள்
மாலைக் குழலாரே மாய்கைகாண் வானுதலே
ஏலக் குழலாரே ஏர்விழிப்பாராதே!
சொரியும் மலர்க்காவில் சுற்றிவர அக்கினியை
எரியை வளர்த்து இருந்தார் இலட்சுமியார்.




பாரத பாக்ய விதாதா
ஆகஸ்ட் 15, 1947 அன்று இந்திய மக்கள் தங்கள் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.
இந்திய சுதந்திரத்தின் 32வது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில்
★ நமது சாதனைகளை நினைவுபடுத்தி ஆக்கமும் ஊக்கமும் பெறுவோம்
★ ஒளிமயமான எதிர்காலத்துக்காக புத்துணர்வுடன் பாடுபடுவோம்.
32 வருட சுதந்திர வாழ்வில்...
★ நாட்டின் ஒற்றுமையை நிலைநிறுத்தி அன்னிய ஆக்கிரமிப்புகளை முறியடித்திருக்கிறோம்.
★ மக்களின் ஆயுள் காலம் சராசரியாக 32லிருந்து 52 வருடமாக உயர்த்தியுள்ளோம்.
★ உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்கி இருக்கிறோம்.
★ தொழில் துறை உற்பத்தியை நான்கு மடங்குக்குமேல் அதிகரித்திருக்கிறோம்.
★ அன்னியச் செலாவணி கையிருப்பை ரூ. 5,000 கோடிக்கு மேலாக இருக்கச் செய்துள்ளோம்.
நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலில் கண்டுள்ளபடி,
"நமது நாட்டின் சாதனை குறித்து நாம் பெருமைப்படலாம்...
அன்னிய நாடுகளின் உதவியை நாடியிருந்த இந்த நாட்டின் நொடிந்து போன பொருளாதாரம் இன்று நவீனமயமாக்கப் பட்டு சொந்த பலத்தில் நிற்கிறது."
நாட்டின் சாதனை குறித்து பெருமை கொள்ளுவோம்
சுதந்திரத்தை காத்து முன்னேற்ற வாழ்வு பெற
ஒன்றுபட்டு பாடுபடுவோம்.
davp-79/140

# இராமாயண அம்மானை

## (வாலிவதம்)

காந்தல் மலரை இரு காதில் அடையாளமிட்டு
போந்து பொருது மென புருசோத்தமன் ஒளிந்திருந்தான்
அம்பா துணையாக ஆனை துணையாக
செம்பாதம் போற்றி தெளிந்த பெருமனதாய்
அஸ்தகிரி நாதர் ஆனை துணையாக
மத்தகத்து யானைபோல் மதம் பொலிந்து வாலிமுன்னே
நின்றெதிர்த்து மெத்த நிலத்தையதிர்த்து நின்று
இன்று தெரியும் இனிவாடா வாலி என்முன்
மண்ணதிர விண்ணதிர வான் முகடு தான்கிழிய
எண்ணரிய அஷ்டகிரி எட்டும் கிடுகிடென
விண்ணதிர வாலி விழியில் நெருப்பெழவே
கொன்னுவிட வேணு மென்று கொங்நகை முறுக்கலுற்றான்
அப்போது வாலிக்கக முடையாள் ஏதுசொல் வாள்
இப்போ மதியாமல் இவன் வந்திருப்பானேன்
தடக்கையுடையவரே தட்டுப்படப் போறீர்
வடக்கிருந்து வேறிருவர் வந்தாரென்றார்கள்
கடுக்கைச் சடையாரோ காயாம் பூ மேனியரோ
படைக்குத் துணையாகப் பரிந்து வந்தா ராகுமென்று
புன்னை மலர்க்குழலாள் புத்தி சொல்லக் கேளாமல்
மின்னும் கடல்புடை சூழ்மேதினிக்கு மப் பாலும்
என்னில் மிகுத்த பலமுடையோர் இல்லையென்று
சிரித்து மிக வாலிதீபறக்கக் கண்ணாலே
விரித்துக் கரத்தையவன் மிகவதட்டிக் கொக்கரித்து
குத்தினன் வாயாலே குருதி எதிர் கொள்ளவே
மெத்தவே செங்குருதி வேலை தனிற் சென்றுருவி
அஷ்டகிரி வெருல ஆர்ப்பரித்தா ரம்மானே
வெடிக்கும் நெருப்பி டிபோல் மெத்ததுர்த்துக் கொக்கரித்து
அடுத்து மலைபிடிங்கி ஆர்ப்பரித்தா ரம்மானே
வாலியும் சுக்கிரீபனும் மெத்ததிர்த்துக் கொக்கரித்து
பாரமலை பிடிங்கிப்பங்க வரக் கண்சிவந்து
இடிபோல் முழங்கி எழுந்திருந்தார் இருவருமாய்

வாய்பரி வாலி மலை பிடிங்கி வந்து நின்றான்
சூதாக வந்து நின்ற சுக்கிரீப னச்சை விட்டு
மாறாக வாலிதன்னை மல்லாக்காத் தானெடுத்து
கூறாகப் போட்டுக்குத்தினான் சுக்கிரீபன்
குத்துப்பட்ட வாலி கொடிய சினத்துடனே
எண்டி சையும் மற்றும் ஈரேழு புவனங்களும்
அண்டர் முனிவர் அயிராப தக்களிறும்
சேவேரிக் கொளவே செந்தூள் மிகப்பறக்க
வாரியுடைத்த தென வாய்பரி ஆர்ப்பரித்து
ஓடி நின்று வாலி உயுத்தம் பொருதானே
அந்தரத் தோர் காண அமர் பொருதான் சுக்ரீபன்
ஆற்றாமல் ஓடி அமர்களத்தே பின்னடைந்தான்
கனச்சினந் தெழுந்தான் கண்ணிரண்டும் தீபறக்க
நெருக்கிப் பிடித்தளவில் நீள வண்ணன் கண்டு கொண்டார்
கண்டர் ராமன் கணக்க இந்தப் போர்க்களத்தை
காரொளி மேனியனும் கதிர்த்துக்கணை யெடுத்து
காலனெனும் வாலியின் மேல் கண்டக்கவே நினைந்து
ஏற்ற முள்ள வில்லில் இராமசரம் தொடுக்க
ஊற்ற முள்ள வாலி உடல் துணிபட்டதுவே
பட்டவுடன் வாலி பனைதுண்டம் போல் விழுந்தான்
நெஞ்சிலே பட்ட அம்பை நெடுங்கையால் பிடித்துக் கொண்டு
வஞ்சகராம னென்று வரிசிலை எழுத்தைக் கண்டு
செஞ்சிலை வில்லு முந்தன் சேவுகத் திரங்க ளெல்லாம்
துஞ்சலான எந்தன் முன்னே தோன்ற நின்றெய் தாயாகில்
அம்பைப் பிடித்து வாடி அஞ்செழுத்தைக் கண்டு கொண்டு
வம்புடைய வாலிமனம் தளர்ந்தங் கென்னசொல்வான்
உம்பர்க்கரசே ஒளி குடியோ உங்கள் குலம்
தாரமிழந்தாரைத் தரமிழந்தார் தாங்கு வரோ.
பாம்பணையில் பள்ளி கொள்ளும் நிஷ்டூர மாயவரே
வெல்லேனோ உன் கரத்தில் வில்லைப் பறியேனோ
அல்லற் படுத்தேனோ எல்லாருங் காண உன்னை
கண்ணெதிரே கண்டேதான் கனத்த சினம் தீரேனோ
விண்ணமரர் காண வுன்னை வில்லைப் பறியேனோ
கொல்லாம லுன்னைக் கோடி சினந்தீரேனோ
பெண்டு பறி கொடுத்த பெருமாளே யாமாகில்
அண்டிப் பொருதாமல் அகல நின்று எய்தாயே
தொம்பரங்கள் கூட்டி வந்து எய்திலையாய்
பம்பரங்களாட்டி யுன்னை பாரவிண்ணில் எற்றேனோ.
மகமேரு கொற்ற தோறும் வாளரக்கனை வாலில்
அடையாமல் கட்டிவைத்த ஆண்மை யறியாயோ

அந்தரக் கண் கட்டுண்டதனை அறிந்தீரோ
பெருத்தமலை யொண்டி நின்று பெணிவாளி தொட்டியோ
பருத்தப் பட்டபாடு பார்க்கேனோ பாரிலுனை
மற்பொருத வாலி மகாகோபம் தானுறி
விற்பிடித்த கையானே வெண்ணை யுண்ட மாயவனே
கற்பனையா வென்னைக்களத்தில் வதைத் தாயே
சொன்ன போர் வெல்லரியான் சுக்கிரிபன் சொற்கேட்டு
என்னையும் கொல்ல எழுந்ததோ கையுமக்கு

(வெண்பா)

முன்னே எனக்கு மொழிந்தாலவன் முடிபறித்
தின்னேரம் கொண்டு முன் வைக்கேனோ சொன்னேன்
வலியப் போய் சிங்கம் மாட்டாதோ கேட்டேன்
எலியைத்துணை யாய்க் கொண்டாயே.

(பாட்டு)

என்னையழைத்து விட்டு சொன்னது யேவற்படியே
அந்த இலங்கையை அடி யுடனே தான் பிடிங்கி
கொண்டு வந்து சன்னதியில் வைக்கேனோ கொற்றவனே
தோருததுந்துமியை கொன்றவலு நீரறிந்தும்
காராளி மேனியரே கணையால் வதைத்தீரே
இந்நாழிகையில் இலங்கை பொடிபடுத்தி
அந்நாயகியை அழைத்துவர மட்டேனோ
பத்துத்தலையரக்கன் பட்டனத்தைத் தீயெரித்து—இந்தச் சனைப்
குழல் மானையிங்கே கூட்டி வரமாட்டேனோ
என்று பலகால் இராமசரத் துடக்கு
நின்று திகைத்து நெடுமால் முகம் நோக்கி
அழுதான் மிக வாலி, அங்குதனைத் தான்நினைந்து
ஆராகிலும் கூடி அண்ட வொண்ணு தான் மைந்தனே
காராளி மேனியனுர் கணையால் வதைத்தார் காண்
அய்யோ மகனே அறிந்திலையோ அங்குதனே
ஆறும் இணையில்லை யென்று அரசாள நானிருந்தேன்
பாரளந்த மாயர்கணை பட்டுவிழ இக்களத்தை
மார்பைத் துளைத்து விட்டதுகாண் என்மகனே
மாணிக்க மார்பனே வன்னியர்கள் பேரரசே
ஆனியாய் வந்தவர்க்கு அசையாத சேவுகனே
வானேரிநான் போனல் மகனே நீ காணுய் காண்!
வாராய் மகனே உன் வடிவுதனை நான் காண
போரேன் மகனே என்று புலம்பியே தானெழுந்தான்

வாலியைச்சுக் கிரீபன் மார்மேல் எடுத்தணைத்து
பொன்னே மணியே புகழேஎன் புண்ணியனே
அண்ணே உன் ஆண்மை அழிந்ததே இக்களத்தே
வன்குலையால் அங்கேவாலி விழச் சுக்கிரீபன்
தன் கையால் தன் முகத்தை அறைந்து கொண்டழுதான்
செங்குருதிமேலே சேருடத்தான் விழுந்து
கண்ணீர் சொரிதுக் கதறினன்காண் அம்மானே
வில்லார் சிலைப்புருவ மெல்லிநல்லாள் தாரகைதான்
அய்யோதுணையிழந்து விட்டேனே என்றழுதாள்
அங்குத னங்கே அமர்ந்து வாழ் மண்டபத்தே
வாளிபட்ட வாலி தன்னைவந்து சொன்னார் தூதுவர்கள்
கேட்டு மிகவாடிக் கெட்டேனென்றழுதான்.
சட்டமுடனே அமர்க் களத்தில் வந்து புக்கு
வாலிதனைக் கண்டு மதிமயங்கி அங்குதனும்
காலில் விழுந்து கதறினன்காண் அம்மானே
அலையாழி தான் கலக்கி அமுது கடைந்தவனே
மலையக லுயர்ந்துவனே மன்னவனே இக்களத்தில்
சிலையால் வலிய சீராமன் பட்டுருவி
குலையாலே சூழ்ந்து விழுந்தீரோ அப்பாரே
அந்தப் பலமுடைய அய்யரே உட்மையினி
எந்தப் பிறப்பில் இனிக் காண்பேன் என்றழுதான்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் பனிநீரும்
அள்ளித்திரு மார்பில் அணிந்து வரக் காணமல்
பள்ளிக் கொண்டார் கைக்கணையால் பட்டுவிழ கண்டேனே
வீராக வந்தனிந்த வேந்தனுயிர் காத்து
பாரக வானுலகம் ஏற்றின வர் காணதே
கூருக அம்புபட்டு குலைக்களத்தில் வீழ்ந்தீரோ?
சேருக செங்குருதி ஆறோடே கண்டேனே
மெத்தைபவழத் தலைகணியும் பட்டுடனே
கட்டிலின்மேல் கண்துயிலும் திருமேனியிலே
செம்புழுதி ஆகிக்கிடப்ப(னே) என்றழுதான்
பஞ்சணை மெத்தையின்மேல் துஞ்சு திருமேனியிலே
ஆயன்கணை பட்டுருவி அடினளிலக் கோதான்
புனிதன் விதித்த விதிப்படியோ என்றழுதான்
அரிய திருமேனியிலே அம்புபட்டு நீர்விழுந்தீர்
சீரான மூக்கும் திருமுடியும் மார்பழகும்
சிங்காதனந்தனிலே சென்று நான் காணமல்
செருக்காண விழுந்ததே என்றழுதான்
மைந்தன் கதறியழ வாலியுயிர் போகாமல்

சிந்தை கலங்கி சிவனே சிவாயவென்று
வாசப் புவியில் பிறவாமல் வைத்திலையே
வாசப் புவியில் பிறந்தாலும் மக்கள் சுற்றம்
ஆசைப் பிறப்பில் அழியாமல் வைத்திலையே
வம்புயர்ந்த தோளார் மாயவனுர் தன் கையிலே
அம்புக் கிலக்காய்யிருந்தனே என்றழுதான்
தார் கொண்ட பூங்குழலால் தாரகையால்வந் தலறி
ஈரேழுலகதிர ஏங்கி விழுந் தழுதான்
தோருதசேவுகனே துந்திமிலையைக் கொன்றவனே
காராழி தன்னைக்கடந் தழுதம் கண்டவனே
மட்டுயர்ந்த தோள் பெரியவாளரக் கனை வாளில்
கட்டி வைத்த சேவுகனே கண்ணாளா கட்டழகா
வாரியெடுத்து மடியிலே வைத்திருந்து
ஓங்கும் பெருமாள் உகந்துணர்ந்து கொள்ளாமல்
தாங்கிச் சிலையால் சதித்தார் என அழுதாள்
சாரங்க பாண சம்புவே நீர் கேளீர்
வாலியை நீரின்று கொல்லவான் பிழைகள் செய்ததுண்டோ
குன்றெடுத்த மாயவரே குற்றமிவன் செய்ததுண்டோ.
நன்று நடுவில்லாமல் நாராயணு கொன்றீரே.

விருத்தம்

மரங்கள் ஏறிக்கனிகள் தின்று
மரும்புனத்தில் நாமிருப் போம்
கரங்கள் கூப்பி (எப்) பொழுதும்
காலைமாலை தொழுதிடு வோம்
அரங்கன் என்னைய ராம அய்யனே
குரங்கை எய்யவோ ராமா.
கொற்ற வில் தான் வாங்கினீரோ

நடை

என்றவள் தான்சொல்ல இராமச்சந்திரன் சொல்வான்
அஞ்சாதே வன்மைக் கரியதொரு சேவகனே
சேவுகனே அறியாமல் செய்த அபராதம்
நஞ்சோதி யானை நாலுமறை தானுனை
என்னனை தம்பி இலட்சுமணர் தம்மானை
உன்மேலே வாளி உருவிபுண் ஆற்றுகிறேன்
என்னுனை வாலி இருக்க நீ வல்லாயோ

என்று சொல்ல மாயன் இவனதுகேட் டேதுசொல்வான்
நன்றெனலே வாலி நகைத்ததுகேட் டேதுசொல்வான்
உங்கள் குலத்தார் வடுப்பட் டிருந்தாலும்
எங்கள் குலத்தார் இருப்பாரோ எம் பெருமாள்
சங்குச் சக்கரத்தால் என்னைச் சாதித்தால் போல்
அங்குதனும் தம்பியையும் அப்படிநீ எண்ணுமல்
இன்றுபோல் என்றும் இருவரையும் நன்ருக
சென்றுபோ வென்று சினேகமுடன் வாழுமென்ருன்.

## விருத்தம்

கொம்பில் தூங்கும் மாங்கனியும்
கொடிய வறுக்கைப் பலாச்சுளையும்
நம்பித்தின்று திரிந்தோம் நாம்
நாராயணனுக் கென்ன செய்தோம்
தம்பித்துணையோ தக்கதரியப் பெருமானே
அம்பிற் கிடத்திரு நாமம்
அடியேன் தலைமேல் கொண்டேனே.

## நடை

நின்று தான் வாலி நெடுஞ் சரத்தைக் கைநெகிழ்ந்தான்
ஒன்றுபடநீங்கள் உறவுபட்டு வாழுமென்று
கூட்டியிருவரையும் கொண்டும் வந்து சன்னதியில்
காட்டிக்குடுத்து கைலாசம் சேர்ந்தானே!



# இராமாயண அம்மானை

## (இலங்காதகனம்)

மையமாநும் பச்சைவடிவர் தமைக்காணுமே
அய்யமிரக்க வந்து அன்றெளித்துக் கொண்டு வந்தாய்
இப்போதே எங்கள் இலட்சுமியை விட்டிலையா
தப்பாமல் உந்தன் தலையறுப்பேன் நானரக்கா!
பாயும் புலிபோல் பாய்ந்தவனைப் பார்த்திருந்து
வாயிலடிக்கக் கரம்நோக்கினான் வாளரக்கன்

### விருத்தம்

வெடித்தெழு சினத்தினில்
மிகுத்தவன் அரக்கன்
கடித்தெழு கரத்தினில்
மிகுத்தவன் அடித்தான்
அடித்தகை பிடித்தவன்
அரக்கனை முறைத்தான்
முடித்தலைகள் பத்தினும்
முகத்தினும் அடித்தான்

பிடித்த கரத்தையவன் மேனிச்சு போந்து நின்று
அடித்தான் அனுமான் அரக்கனிட தாடையிலே
கதித்த கனல்போல் கண்சிவந்து வாளரக்கன்
கோவித் தெழுந்து குரங்குதனைக் கொல்லு மென்றான்
மேவிச்சபையில் விபூஷணன் எழுந்திருந்து
மாதுற்ற தோளோனே மாந்தன் விடுதூது
தூதுவரைக் கொள்வாரோ சொற்பெரிய போர்வேந்தே
அங்கம் பொரும் யானைக் கசையாத அண்ணாவே
ஆகாது காணும் அரக்கர் குலத்தரசே
எங்கள் குலத்துக்கரசே இனியிவனை
பங்கப்படுத்திவிடீர் பத்துத் தலையானே!
என்றான் விபூஷணன் எதுரைப்பான் வாளரக்கன்
உத்திரங்கள் சொல்லியிவன் ஒட்டானே உள்ளாளாய்
சந்துருவாய் நின்றெனக்கு சாதித்தாய் தம்பி நீ
தம்பியல்ல நீயெனக்குச் சத்துருகாண் இன்றுமுதல்

தம்பி எந்தன் முன்னே நிற்காதே நீபோடா
கொல்லாமல் கொள்ளும் குரங்குதனை யிப் பொழுது
காச்சிவந்த நெய்தனிலேகண ... மிகவழுத்தி
தோச்சுவந்து வால் தீயைச்சுற்றினர்காண் அம்மானே
வரையெடுத்த திண்டோளான் மகாகோபந் தானாகி
கட்டிப்பிடித்துக் கனலைக் கொளுத்தி விட்டார்
பட்டுப் புறத்து சுழன்று விழுவார் போல்
.........தம்பியையும் அங்கே மிக நினைந்து
திக்கெங்கும் எண்ணும் திருமால் விடுதூதன்
புக்கரக்கன் மூதூர்புகையாய்ப் பொறிபறக்க
முந்தரக்கன் வாசல்முகப்பில் பொரிகொளுத்தி
முத்தின் மணிவாசல் முன்புறத்தே கொள்ளிவைத்து
அத்தம் பவளம் அழுத்திய வாசல் சுட்டான்
வட்டமதில் மண்டபமும் வாளரக்கன் மாளிகையும்
திட்டெனவே சுட்டனுமான் தேர்வீதியும் சுட்டான்
வட்டமதில் சுட்டு வரவாழும் ஆசாரியானும்
திக்கெங்கும் எண்ணும் தெருத்தெரு வாய்த்தான் சமைத்தான்
அப்போதனுமான் ஆசாரி முன்சென்று
தப்பாதனு மக்கொடி விருதுநாம் தாரோம்
சிமிட்டி விளிப்பளவில் திக்கெங்கும் வால்சுழட்டி
அதட்டி அனுமார் அனுமக்கொடி கொடுத்து
பத்துத் தலையரக்கன் பட்டனத் தேர் தீயெரித்தான்
அந்தமுள்ள மாளிகையும் அன்சாகி தான்கொளுத்தி
நாடக சாலைகளும் நற்பவழ மண்டபமும்
தேர்க் கூட்டமுள்ளதெல்லாம் தீபால் விளையாடி
வாகமுள்ள மாளிகையும் வகையாவே கொள்ளிவைத்தான்
வடக்குத் திசையில் மந்திரிகள் மாளிகையும்
மல்லர் தெருவுள்ளதுவும் வால்அசைத்துக் கொள்ளிவைத்தான்
கீழைத் தெருவுள்ளதும் கேள்வியுள்ள கூடங்களும்
இலக்கணன் மாளிகையும் எரியால் விளையாடி
தெற்குத் தெருவுள்ளதுவும் செக்கார்கள் தன் தெருவும்
சீராய்எரி கொளுத்தித் திருமால்விடு தூதன்
கைக்கோளர் வீதிகளும் கன்னரிடத் தெருவும்
கன்னளர் வீதிகளும் கரும்புகைகள் தான்பறக்க
போயபாயமாகவே புக்கனுமான் கொள்ளிவைத்தான்
அம்புலவும் கையான் அரக்கன் மகன் தெருவும்
கும்பகர்னன் மாளிகையும் கூசாமல் கொள்ளிவைத்தான்
இலக்குவனன் மாளிகையும் இராசாக்கள் தன் தெருவும்
கோடைப் பொரிபோலே நின்றனுமான் கொள்ளிவைத்தான்

கலக்கமுறக் கண்டு கடைத்தெருவும் கொள்ளிவைத்தான்
வாணியர் வீதிகளும் மண்ணின்றன்னிடத் தெருவும்
சோணகர் வீடும் துலுக்கர் நெடுந்தெருவும்
ஆசாரியர் தெருவும் அடியார் நெடுந்தெருவும்
மூரி நிமிர்ந்தனுமான் முறையாகக் கொள்ளிவைத்தான்
ஆக மகிழ்ந்து அனுமானும் ஆர்ப்பரித்து
மேலைத் தெருவுள்ளதுவும் மேகநாதன் மாளிகையும்
அந்தணர்கள் தன் தெருவும் அரக்கியர்கள் தன் தெருவும்
செந்தமிழ்ப் புலவர் தெருக்களும் கொள்ளிவைத்தான்
பள்ளிகள்தன் தெருவும் பாய்வாணியத் தெருவும்
கொள்ளிகண்ட கண்ணனுமனை கொள்ளிவைத்தா னம்மானே
அம்பட்டர் வீதிகளும் ஆனைப்பாகன் தெருவும்
காசுக் கடைத்தெருவும் கற்பித்தார்தன் தெருவும்
வேசியர்கள் தன் தெருவும் விளையாட்டாய்க் கொள்ளிவைத்தான்
செட்டியார்தன் தெருவும் சேடரிடத் தெருவும்
ஒட்டியர்கள் தெருவும் உவச்சர் நெடுந்தெருவும்
விட்டமுனை வாங்கா வேந்தரிடதன் தெருவும்
இரட்டிகள் தெருவும் இராவுத்தமார் தெருவும்
பட்டவர்த்தனர் தெருவும் பாவலர்கள்தன் தெருவும்
நட்டுவர் தெருவும் நடுப்பிறபாய் கொள்ளிவைத்தான்
இடையர் தெருவும் இலைவாணியர் தெருவும்
குறவர் குடிசும் குறைவறவே கொள்ளிவைத்தான்
ஆண்டிகள் மடமும் அரிதாசர்தன் தெருவும்
தாண்டிக் குதித்தனுமான் தானங்கே கொள்ளிவைத்தான்
மடையர் தெருவும் மடவணிகர் தெருவும்
கோமட்டியர் தெருவும் கொல்லரிடத் தெருவும்
தான்மட்டியார்ப் பரித்துதானங்கே கொள்ளிவைத்தான்
வேடர் தெருவும் விளையாட்டாய்க் கொள்ளிவைத்தான்
கொலுத்தேவடியாள் தெருவும் கொள்ளிவைத்தா னம்மானே
கரையரிடத் தெருவும் காவலாள்தன் தெருவும்
மலையாளர் தெருவும் வால்நிமிர்ந்து கொள்ளிவைத்தான்
கருனடர் வீடும் கலிங்கரிடத் தெருவும்
சங்கார காலமெழத்தானங்கே கொள்ளிவைத்தான்
மூதூருப் பட்டணத்தை மூடவளைத்து சுட்டான்.

— (முடியவில்லை)

# கொடுமுடி பசுபதி லிங்கர்

புலவர் செ. இராசு அவர்கள் திரட்டியுள்ள ஓலைச்சுவடிகள் ஒரு இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளன. பார்த்துப் படிக்க நேரமும் போதிய ஆட்களும் இல்லாமையால், அந்தத் தங்கச் சுரங்கம் துய்க்கப்பாடமல் இருக்கின்றது.

ஒருநாள் திறந்து ஆராய்கையில் ஒரு ஒத்தை ஓலை கிடைத்தது. அது சுவடிக்கட்டு ஒன்றிலிருந்து தனித்துப் பிரித்துக் கலங்கிக் கிடத்திருக்கின்றது. அதன் கலைப்பில் " கொடுமுடி பசுபதிலிங்கர் பேரில் " என்ற தலைப்புடன் கீழ்க்கண்ட பாடல் இருந்தது.

திங்களணி வேணியும் கண்களொரு மூன்றும்
செழுஞ்சூரிய விம்பமுகமும்
செம்பவளவாயும் மணிகுண்டல மிசைத்த புயமும்
திரு நீலகண்ட வடிவும்

அங்கை மழு மானும் கரகபாலும் சூலமும்
அருள்ப் பிரகாச வடிவும்
அங்கொன்றை மாலையும்
ருத்ராட்ச மாலையும் அணிந்த நாகாபரணமும்

பொங்கு திரு வெண்ணீறு மேனியும் காந்தியும்
புலியாடை தனிலழகும் புகழ் கொண்ட
முப்பத்து முக்கோடி தேவர்கள்
போற்றிய மலர்ப்பாதமும்

பங்கில் ஒரு..........................................

இறுதிவரி அதன் மேல்வரியில் ஏறுமாறு எழுதியிருப்பதால் தெளிவாகப் படிக்க இயலவில்லை.

இப்பாடலின் சிறப்பைவிட இதன் தலைப்பு குறிபிடத்தக்கது. கொடுமுடி ஈசருக்கு " பசுபதிலிங்கர் " என்ற சொல்வழக்கு உள்ளமை வரலாற்றிற்கு உதவுகின்றது. வேள்விகுடிச் செப் பேட்டில் வருகின்ற

மீண்டொழிய மணி இமைக்கு மெழிலமைத்த
நெடும்புரிசைப் பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப்
பசுபதியது பந்மபாதம் பணிந்தேத்தி

என்ற பகுதிக்கு குறிப்பெழுதும் போது, " கொடுமுடி ஈசருக்குப் பசுபதி என்ற பெயரில்லை, அதனால் தேர்மாறன் வணங்கியது கரூர் கோயிலாக இருக்கலாம் " என சில ஆராய்ச்சியாளர்கள் எழுதி யுள்ளளர். தற்போது கிடைத்துள்ள துண்டோலை, இதனை மறுக்க உதவுகின்றது.

# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா



## பெரியார் விதைத்த பகுத்தறிவுக் கொள்கைகள்

## பூத்து மணம் பரப்பி புகழ் பெருக்கும் நாள் இதுவே

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

தீண்டாமை என்பதே, சாதி காரணமாக ஏற்பட்டதே தவிர, அதற்கு வேறுகாரணமோ ஆதாரமோ இல்லை. சாதியை வைத்துக் கொண்டு தீண்டாமை ஒழிய வேண்டும் என்பது சிறிதும் அறிவுடைமையாகாது என்பது எனது கருத்து.

எந்தத்துறையில் ஆகட்டும், சிந்திக்காதே - நம்பு' என்று சொல்லி, சிந்திக்கவிடாமல் தடுப்பது, மனிதனை மிருகத்தை விடக் கீழான நிலைக்குக் கொண்டு செல்வதாகும்.

தமிழர்களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுப் பிரச்சாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் தன்மையில் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

- தந்தை பெரியார் -

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.

# உலகத் தமிழ் மாநாடுகள்

இந்தியயியல் பற்றிய ஆராய்ச்சி உலகத்தின் பல பகுதிகளில் நடைபெற்று வருகின்றது. பன்னெடுங்காலமாக இந்தியா என்றதும் சமத்கிருதம் மட்டுமே அவர்களின் கருத்தைக் கவர்ந்த காலம் மாறியது. தொன்றுதொட்டு காலத்தால் அழியாத அழகு மொழி அவர்களின் ஆய்வுப் பொருளாக ஆயிற்று. தமிழும், தமிழ் சார்ந்த கருத்துக்களும் அவர்களின் சிந்தனையைப் பற்றிக் கொண்டன. தமிழ் பற்றிய. உலகந் தழுவிய ஆராய்ச்சி, ஒருங்கிணைப்பு இன்றியமையாதனவாகிவிட்டன.

## தமிழ்ப் பண்பாட்டு மன்றம் (Academy of Tamil Culture)

பேராசிரியர் தனிநாயக அடிகள், மு. வரதராசனார் போன்றவர்கள் முன்னின்று நிறுவிய தமிழ்ப் பண்பாட்டு மன்றம் TAMIL CULTURE என்ற ஆங்கில ஏட்டை 1952 இலிருந்து உலகந் தழுவிய ஆய்விதழாகத் தொடங்கி நடத்தினர். இந்திய இயல் ஆராய்ச்சியாளர்களிடையே திராவிட மொழிகளின் ஆய்வு முன்னிடம் பெறுவதில் 'தமிழ் கல்ச்சர்' ஏட்டின் பணி குறிப்பிடத் தக்கதாக இருந்தது. ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டுமென்ற உந்தல் உலக அறிஞர்களிடையே தோன்றியது.

## அனைத்துலக கீழ்த்திசை ஆய்வாளர் பேரவை

1964ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்ற 26வது அனைத்துலகக் கீழத்திசை ஆய்வாளர் பேரவைக் கூட்டத்தில் சந்தித்துக் கொண்ட அறிஞர்கள், தமிழாய்வு பற்றிய பொது அரங்கம் காணும் வழிவகைகளை ஆராய்ந்தனர். பேராசிரியர் ஜே. பில்லியோசா (பிரான்சு), டி. பர்ரோ (யு.கே.), எம். பி. எமினோ (யு.எஸ்.எ.), எஃப். பி. ஜே. கூப்பர் (ஆலந்து), கமில் சுவலபெல் (செக்கோசுலோவகியா), சேவியர். எஸ். தனிநாயக அடிகள் ஆகியோர் சேர்ந்து அனைத்துலகத் தமிழாய்வுச் சங்கத்தினைத் தோற்றுவித்தனர்.

## அனைத்துலகத் தமிழாய்வுச் சங்கம்
## (International Association of Tamil Research)

அனைத்துலகத் தமிழாய்வுச் சங்கம் விரைவிலேயே உலக நாடுகள் கல்வி, சமுதாயம், பண்பாடு நிறுவனத்தின் (UNESCO)

உறுப்பான அனைத்துலகக் கீழ்த்திசையாளர் ஒன்றியத்தில் ஒரு உறுப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1967இல் அமெரிக்காவில் (ஆன் ஆர்போர்) நடைபெற்ற 27வது அனைத்துலகக் கீழ்த்திசை ஆய்வாளர் பேரவைக் கூட்டத்தில் இது நடைபெற்றது. அடுத்து ஆஸ்திரேலியா (கான்பெர்ரா)வில் நடைபெற்ற 28வது அனைத்துலக கீழ்த்திசையாளர் பேரவைக் கூட்டம், அனைத்துலகத் தமிழராய்வுச் சங்கத்தின் பணிகளை விரிவாக்க உதவியது. 1873ஆம் ஆண்டு பாரீசில் அது தோன்றியபோது நிறைவேற்றிய பின்வரும் தீர்மானத்தை நினைவு கூர்ந்தது: "Ecole des languages orientales vivantes" கழகத்தில் தமிழாய்வுக்கு ஒரு பீடம் அமைக்குமாறு பிரெஞ்சு அரசாங்கத்தை வேண்டுவது.

## அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு — மாநாடு (International Conference-Seminar of Tamil Studies)

பன்னாட்டு அறிஞர்களும் கலந்து ஆராயும் வகையில் இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை உலகந்தழுவிய கருத்தரங்குகள் நடத்துவ தென முடிவெடுக்கப்பட்டது அதன்படி முதல் அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு, 1966இல் மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் நடைபெற்றது. அந்நாள் கல்வி அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் தமிழறிஞர் குழு மலேசியா சென்று கலந்து கொண்டது.

இரண்டாவது மாநாடு 1968இல் சென்னையில் கோலாகலமாக நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் ஆட்சி பொறுப்பேற்றிருந்த காலம். கலைஞர் கருணாநிதி பொதுப்பணி அமைச்சராக இருந்த வேளை. மக்கள் மத்தியில் ஆர்வம் பொங்கி வழிந்தது. அரங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கும், அம்பலத்தில் நடைபெற்ற மாநாடும் தனிப்பெருந் திருவிழாக்களாகத் திகழ்ந்தன. அரசியல் கட்சிகள் அனைத்தும் வேறுபாடு இல்லாமல் விழா எடுத் தனர். அறிஞர் அண்ணாவின் பண்பாடு வெற்றிக்கு வழிகோலியது.

மூன்றாவது மாநாடு 1970இல் பிரெஞ்சு பாரீஸ் மாநகரில் நடை பெற்றது. தமிழகத்து முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி தொடங்கிவைத்தார். ஒன்பது பேர் கொண்ட அறிஞர் குழு தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டது.

நான்காவது மாநாடு இலங்கையில் 1974இல் நடைபெற்றது. இலங்கையில் தமிழர் மைனாரிட்டி வகுப்பினர். இலங்கையின் தமிழ்ப் பகுதி தனிநாடாக வேண்டுமென்று கோரிவந்த காலம்.

ஆளும் சிங்கள அரசு மாநாட்டிற்கு அனுமதி வழங்க மறுத்து விட்டது. மாநாட்டின் பேராளர்கள் படங்களை வாங்கி எல்லா துறைமுகங்களுக்கும், விமான நிலையங்களுக்கும் அனுப்பி, அவர்கள் எந்தவடிவில் வந்தாலும் இறங்க அனுமதிக்கக் கூடாதென உத்திரவிட்டது. அனைத்துலகத் தமிழாய்வுச் சங்கத்தின் இலங்கை கிளையோ, அரசு அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும் மாநாடு நடந்தே தீரும் என அறிவித்துவிட்டனர். இறுதி நேரத்தில் தலைமை அமைச்சர் திருமதி சிரீமாவோ பண்டாரநாயகா அவர் களிடம், அவர்களின் கட்சிககாரர் சிலர் சென்று இறைஞ்சி அனுமதி வாங்கி வந்தனர். மாநாடு கோலாகலமாக நடைபெற்றது.

தமிழகத்திலிருந்து அரசுச்சார்பாக யாரும் போக முடியவில்லை. "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்ற பழஞ்சொல்லைக் கடலில் எறிந்துவிட்டு தமிழ் மீதுள்ள பற்றின் காரணமாக ஒரு சில இளைஞர்கள் சென்று சேர்ந்தனர். வேறு சில தமிழறிஞர்களும் சொந்த முயற்சியில் வந்து சேர்ந்தனர். தில்லியிலிருந்து நான்கு பேரும், பெங்களூரிலிருந்து ஒருவரும், கோவாவிலிருந்து இருவரும் ஆக இந்தியாவிலிருந்து மொத்தம் பதிநான்கு பேர் வந்துசேர்ந்தனர்.

இலங்கை மக்களின் ஆர்வம் கரைபுரண்டு ஓடியது. முழுத் தென்னை மரங்களையும், பனை மரங்களையும், வெட்டி வந்து வீதிதோறும் நட்டு வைத்தனர். தெருவெல்லாம் அலங்காரம். வீடு தோறும் பூரண கும்ப வரவேற்பு. நகரங்கள் மட்டுமின்றி நாட்டுப் புறங்களில் விழாக்கோலம். எங்குபார்த்தாலும் மாநாட்டு இலச்சினை பொறித்த கொடிகள், பதாகைகள், மஞ்சள் வண்ணத்தில் உலகமும் கோபுரமும். அதனைச் சுற்றிலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" வாசகம்.

இறுதிநாள் ஊர்வலத்தில் 90க்கு மேற்பட்ட அலங்கார வண்டிகள். மாட்டு வண்டிப் பந்தயம். இன்னும் எவ்வளவோ! அனைத்தையும் சொல்லிமாளாது.

ஐந்தாவது மாநாட்டை தமிழகத்து மதுரையிலேயே நடத்துவ தென ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டு ஆண்டில் நடந்திருக்க வேண்டும். முடியவில்லை. 1976 சனவரியில் நடந்திருக்கவேண்டும். ஆனால் அடுத்து மார்ச்சு மாதம் நடைபெற இருந்த பொதுத் தேர்தல் காரணமாக ஒத்திப்போடப்பட்டது. சனவரி இறுதியில், தமிழக அரசு கலைக்கப்பட்டு மத்திய அரசின் நேரடி ஆட்சியில் வந்துவிட்டது. ஏற்கெனவே இந்தியாவில் "நெருக்கடி காலம்" அமலில் இருந்தது. 1977 வரை தொடர்ந்தது.

இலங்கையில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் செய்திப்படம் இறக்குமதி செய்யப்பட்டது. அதில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு முக்கியத்துவம் இருந்த பகுதிகளை இலங்கை அரசு வெட்டிக் கொண்டது. இந்தியாவில் வெட்டு இல்லாமல் சென்சார் ஆகியது. ஆனாலும் அதில் தற்போதைய முதலமைச்சரின் முகம் சற்று பெரிதாகத் தெரிந்ததைக் காரணமாக வைத்துக் கொண்டு, topicality இல்லை என்று வெளியில் சொல்லி, சென்னைத் தொலைக்காட்சி நிலையம் திரையிட மறுத்து விட்டது. திரைப்படத்தை சென்னைப் பத்திரிக்கையாளருக்கு அழைப்பு அனுப்பி போட்டுக் காட்டினோம். வந்தவர்கள் குறைவு. அவர்களும் ஏதும் எழுதவில்லை. எப்படியோ, போனதெல்லாம் போகட்டும். தற்போதாவது விடிவு காலம் பிறந்ததென மகிழ்வோம்.

1980 ஆம் சனவரி 2 முதல் 8 தேதி வரை ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரையில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. முதலமைச்சர் தலைமையில் மாநாட்டுக் குழு செயல் பட்டு வருகின்றது.

மேற்காப்பிரிக்காவில் உள்ள செனகல் நாட்டு அதிபர் மாண்புமிகு டாக்டர் இலியோ போல்டு செதார் செங்கோர் அவர்களும் மதுரை மாநாட்டில் கலந்து கொள்வார்.

ஐந்தாவது மாநாட்டின் இலச்சினையில் முன்பு இருந்த கோபுரத் திற்குப் பதிலாக, நடராசர் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் ஆங்கிலம் மட்டுமே உள்ளது. தமிழ் இல்லை.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டின் போது, கடற்கரையில் தமிழ் வல்லாருக்குச் சிலைகள் வைக்கப்பட்டன. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் திருக் குறள் ஆராய்ச்சிப் பீடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழக அரசின் மானியத்தில் நடைபெறும் வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுச் சிறந்த முறையில் பணியாற்று கின்றது

இது போன்ற பல நல்ல காரியங்கள் இந்த மாநாட்டின் போதும் நடைபெறும். தமிழக மக்கள் அனைவரும் இதனைத் தத்தம் வீட்டு விழாவாக எண்ணி அலங்கரிக்க வேண்டும். மாநாட்டுக் கொடிகளைப் பறக்கவிட வேண்டும். தெருவெல்லாம் விழாக் கோலம் விளங்கவேண்டும் நாடெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க வேண்டும்.

தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் கொண்டாடும் தனிப் பெரும் திருவிழாவாகத் திகழவேண்டும்.

# பெரிய மணலி

—★—

திருச்செங்கோடு வட்டத்தில் வையப்பமலையிலிருந்து குறுக்காக நாமக்கல் செல்லும் பாதையில் அமைந்துள்ளது பெரியமணலி. சிவன் கோயில், பெருமாள் கோயில் உள்ளன. காளியம்மன் கோயில் பெருஞ்சிறப்போடு விளங்குகின்றது. கோயிலுக்குள் சில பழைய நடுகற்கள் உள்ளன. ஊரில் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறும் நிகழ்ச்சி. அப்போது தண்ணீர்ப்பந்தல் வைத்து நீர்வழங்க தர்மம் செய்யப்பட்டுள்ளது. ஊரின் விவசாயப் பூமியின் நடுவில் ஒரு பாறை உள்ளது. அப்பாறையில் உள்ள குழியில் மழை நீர் தேங்கி நிற்கின்றது. சலவையாளர்கள் அங்கு துணி துவைத்து உலர்த்துகின்றனர். அப்பாறையில் ஒரு கல்வெட்டு உள்ளது.

அதன் வாசகம்.

அஷய ஷூ ஆனி மீ
கருமா புரத்தில் யிருக்கும் ந
கரத்தாரில் நல்லா செட்டியா
ர் மகன் சடைய செட்டியார்
தண்ணீர்ப் பந்தலுக்கு இறை
யத்துக்கு வாங்கி விட்டது கிளு
வன்காடு. யிந்த தம்மத்து
க்கு ஆதாமொருவன் இசகு ப
ண்ணிறுல் கெங்கைக்க
ரையில் காரம் பசுவைக் கொ
ண்ண தோசத் திலே
போகக் கடவது, உ.

இக்கல் வெட்டு உள்ள காடு இன்றும் கிளுவன்காடு என்று வழங்கப்படுகிறது. தண்ணீர்ப்பந்தல் தருமம் தேர்விழாவின் போது இன்றும் தொடர்ந்து வருகின்றதாம். ★

# கொன்றை வேந்தன் வெண்பா

— ❋ —

வெள்ளோடு முத்தித்திருமலைக் கவுண்டரால் சிவமலை என்ற வள்ளல் மீது பாடிய சிலபாடல்கள். ஒரு பெருஞ் சுவடிக்கட்டில் சில ஏடுகளே கிடைத்துள்ளன. 'காசிலிங்கப் புலவன்' ஏடு என்று ஒரு ஓலையில் உள்ளது. 90 பாடல்களுக்குமேல் இருந்திருக்க வேண்டும்.

புலவர் இராசு திரட்டியவை.

(17) நீண்டசட கோபன் நிருபன் சுயோதனன்பாற்
பாண்டவர்க்குத் தூதுரைத்த பண்புபா — ராண்டவச்சீர்
தேகா வெள்ளோடைச் சிவமலை பூ பாகீழோ
ராகிலும் தாழ வுரை

(71) நெடுங்கடலும் தன்னீர்மை குன்று மெனவே
படுஞ்சொல் பழமொழியைப் பாராய் — திடம்பெறுசீர்
செல்வா வெள்ளோடைச் சிவமலை பூ பா மாரி
யல்லது வாரியல் ல.

(80) வாலி மடிந்ததுவும் வல்லரக்கண் மாண்டதுவும்
கோலமயிடன் குலைந்ததும்பார் — ஞாலமகிழ்
தென்னா வெள்ளோடைச் சிவமலை பூ பாமோகந்
தன்னை முனிந்து விடு

(90) எற்றோமற் றென்றே இயம்பும் பழமொழிபார்
குற்றமகல் சாத்தந்தை கோத்திரனே—வெற்றி
சிவத்தார் வேள்ளேடைச் சிவன்மலை பூ பாவெத்
தவிடத்தில் நித்திரை கொள்

★

# தேனோலை

பழைய இதழ்கள்

| | | |
|---|---|---|
| 1. | மதுக்கரைப் பட்டயம் | ரூ. 3-00 |
| 2,3,4, | பூர்வ சக்கரவர்த்தி நாடகம் | ரூ. 10-00 |
| 5,6,7, | மெச்சும் பெருமாள் பாண்டியன் | ரூ. 5-00 |
| 8 to 14 | தொகுப்பு | ரூ. 15-00 |
| 15 | பழையனூர் நீலி | ரூ. 2-00 |
| 17 | தட்டயநாட்டார் தெவம் | ரூ. 2-00 |
| 16,18,19,20 | திருச்செங்கோடு ஆய்வுக்களஞ்சியம் | ரூ. 10-00 |

தனி இதழ் ரூ. 2 ஆண்டுக் கட்டணம் ரூ. 8

# THENOLAI

Tamil Quarterly for Archeology & Science

Overall Size : Demmy Octave. (20.5 cm. X 13.5 cm.)

Print Size : 17 cm. X 10 cm.

Advertisement Rates Per Page : Rs. 300.

Approved by the DAVP, Govt. of India

Director of Information & Public Relations,
Government of Tamil Nadu.

OFFICE OF THE CURATOR
RECEIVED
8 செப் 1979




For Quality Retreading of
all Sizes of Tyres from
SCOOTERS TO TRACTOR
in our plant by highly skilled persons
Please Contact

**THE ANAMALAIS RETREADING COMPANY**

225, Dr. Nanjappa Road,
COIMBATORE-641018
PHONE: 34500
TIRUNELVELI-627002
PHONE: 2590

*ARC Symbol of SERVICE! SAFETY!! SAVINGS!!!*


ஆசிரியர், வெளியிடுபவர்: கொடுமுடி சண்முகப் பிரகதம், 11-ஆ, 2ஆம் பெருஞ்சாலை, இந்திரா நகர், சென்னை-600020.
அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.